www.padippakam.com

ஜூன் 2000 மாண்பைக் காக்கும் மாத இதழ் ரூ. 3.00

இனியொரு யுகம் செய்வோம்

# மக்கள் களம்

## சுண்டூரை மிஞ்சிய புளியங்குடி!

– தலித் படுகொலை





## கற்பழித்த 'நீதிபதி'?

நேரடித் தகவல்!!

படிப்பகம்

www.padippakam.com

# தலித் மாணவர் பேரவைத் தேர்தலில் போட்டியிட்டால்...

ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு பின்னர் கே.ஏ. கருணாகரன் என்ற தாழ்த்தப்பட்ட மாணவர் கல்லூரி பேரவை செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கொலை மிரட்டல்கள், அடிதடி கலாட்டாக்கள், தில்லுமுல்லுகள் இவைகளுக்கிடையில் செங்கல்பட்டு இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசினர் கலைக் கல்லூரியின் 1999-2000 ஆண்டுக்கான மாணவர் பேரவைத் தேர்தல் நடைபெற்றது. மாணவர் பேரவை செயலர் கருணாகரன் தாழ்த்தப்பட்ட மாணவராக இருந்தாலும் அவருக்குரிய மதிப்பை கொடுப்பதில் தவறியதில்லை முன்னாள் கல்லூரி முதல்வர் பொன். ராஜ்குமார். சிறிது நாட்களில் மாற்றலாக பாலகிருஷ்ணன் என்ற "அவாள்" முதல்வரானார். இதன் பிறகுதான் நிலைமையே தலைகீழாக மாறியது.


பாலகிருஷ்ணன்

புதிய முதல்வர் பாலகிருஷ்ணனுக்கு தாழ்த்தப்பட்ட(தலித்) மாணவர்களை அருவருப்பாக பார்ப்பதும், கேவலமாக நடத்துவதுமே வாடிக்கை. கல்லூரியில் நடந்த ஒரு சிறிய சம்பவத்தில் சில மாணவர்கள் தவறு செய்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த மாணவர்கள் அனைவரும் தலித் அல்லாதவர்கள். ஆனால் அந்த குறிப்பிட்ட சம்பவத்தில் தொடர்பேயில்லாத தாழ்த்தப்பட்ட மாணவன் மகாலிங்கம் என்பவரை கல்லூரிலிருந்து சஸ்பெண்ட் செய்து மகிழ்ந்தார் முதல்வர் பாலகிருஷ்ணன். அதே சமயம் குற்றம் புரிந்த மாணவர்களை குறைந்த பட்சம் தண்டனைக் கூட கொடுக்காமல் ஆசிர் தந்தார்.

இதனால் கொதிப்படைந்த மாணவர்கள் கடந்த டிசம்பர் மாதம் கல்லூரி புறக்கணிப்பு பேராட்டத்தில் குதித்தனர். இது சம்பந்தமாக கல்லூரி மாணவர் செயலர் கருணாகரன் முதல்வரை சந்திக்க சென்ற போது கேவலமாகப் பேசி அவமானப்படுத்தி அறையிலிருந்து வெளியேற்றினார். அதோடு நில்லாமல் நான் சுத்த பாப்பான் என்னை உங்களால ஒண்ணும் செய்ய முடியாது. ரௌடியிஸத்தையும் என்னால காட்ட முடியும் என மிரட்டலை கட்டவிழ்த்தார்.

தாழ்த்தப்பட்ட மாணவன் கல்லூரி பேரவை செயலராக இருப்பதை பொறுத்துக் கொள்ள முடியாத இவர், செயலர் கருணாகரன், கல்லூரியில் நடக்க போகும் ஒரு விழாவிற்கு அமைச்சர் சமைய நல்லூர் செல்வராஜ் அவர்களை அழைப்பதற்காக சுமார் 3 வாரங்கள் அப்பாயின்ட்மெண்ட் கிடைக்காமல் அலைந்துள்ளார். கல்லூரிக்காக கல்லூரி பேரவை செயலர் என்ற முறையில் பணிபுரிந்த நாட்களை கல்லூரிக்கு வராத நாட்களாக கணக்கிலெடுத்தார் முதல்வர் தேர்வு எழுத தேவையான 65 விழுக்காட்டிற்கும் குறைவான நாட்களே உள்ளன. என அறிவித்து மூன்றாம் ஆண்டு இறுதி தேர்வை எழுத விடாமலேயே கருணாகரனின் வாழ்க்கையை முடமாக்கி விட்டார்.

இனிவரும் நாட்களில் எந்தவொரு தாழ்த்தப்பட்ட மாணவனும் கல்லூரி பேரவைச் செயலராக வரக்கூடாது என்பதே இவருடைய திட்டம்.

கல்லூரி வருகை பதிவு குறைவாக இருப்பதால் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனை தேர்வு எழுதவிடாமல் செய்த இதே கல்லூரி முதல்வர், கல்லூரிக்கு வருடத்தில் 10 நாட்களே வந்த பிற சமூகத்தைச் சார்ந்த பி.காம் படிக்கும் மாணவனை தேர்வு எழுத அனுமதித்துள்ளார்!

தாழ்த்தப்பட்ட மாணவர்களை பழவாங்கி அவர்களை அழித்துக்கொண்டிருந்த செங்கை அரசு கல்லூரி முதல்வர் பாலகிருஷ்ணனுக்கு, அவருடைய சேவைக்கு சன்மானமாக தமிழக அரசால் பதவி உயர்வு அளிக்கப்பட்டு சென்னை பல்கலை கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# இனியொரு யுகம் செய்வோம்!

# களம் காணும் நெஞ்சங்களே!

திட்டம்: 101 செயல்: 1

நிறுவன-ஆசிரியர்

**எல். யேசுமரியான்**

ஆசிரியர் குழு

**சிந்தை ராஜன்**
**விடுதலை நெஞ்சன்**
**பட்டி தமிழ்விரும்பி**

உரிமை மற்றும் வெளியிடுபவர்

**ஜி. கோபிநாதன்**

67, கெனால் தெரு,
சி.பி. ரோடு,
சென்னை 600 021.

அச்சிட்டோர்

**நவஜோதி அச்சகம்**

சென்னை-600 002

படைப்புகள், சந்தா மற்றும் தொடர்புகளுக்கு :

**எம்.ஜெ. நாயகம்**

நிர்வாகி

21டி/1. திருக்கழுகுன்றம் ரோடு,
செங்கல்பட்டு-603 002.



இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த புரட்சிகளில் மிக முக்கியமானது தென் ஆப்பிரிக்கா புரட்சி. இனவெறி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மாண்புமிகு மண்டேலா தலைமையில் ஆப்பிரிக்கர் ஆட்சி மலர்ந்திருப்பது நமக்கு ஒரு உந்து சக்தியும் ஊன்று கோலும் ஆகும்.

தென் ஆப்பிரிக்கர் தொடர்ந்து போராடிய பாங்கும், அவர்கள் பிரச்சனையை உலக அரங்கில் பேசவைத்த விதமும் கவனிக்கத்தக்கவை. இதே தென்ஆப்பிரிக்காவில்தான் அடுத்த ஆண்டு (2001–ல்) ஐ.நா. சபை "இனவெறி ஒழிப்பு" உலக மாநாட்டையும் நடத்த திட்டமிட்டுள்ளது. தலித் செயல் வீரர்களுக்கு இது ஒரு வழிகாட்டி.

தீண்டாமை என்பது உலகில் உள்ள ஒரு தனிப்பெரும் பிரச்சனை. இந்தியாவில் ஏறக்குறைய 30 கோடி மக்கள் இத்தகைய கொடுமையால் பாதிக்கப்படுகின்றனர். இனவெறி பிரச்சனை உலக அரங்கில் பேசப்படுவது போல் தீண்டாமை பிரச்சனை பேசப்படுவதில்லை. உலகின் தலைச்சிறந்த அறிஞர்களில் ஒருவர் அண்ணல் அம்பேத்கர். "இந்திய சைவ உணவும்", "காந்தியும்" பற்றி ஐரோப்பியர்கள் தெரிந்து வைத்துள்ளதுபோல் அம்பேத்கரையும் தலித் மக்களையும் பற்றி அவர்கள் அறிந்திடவில்லை. இதைத்தான் எனது கடந்த ஏப்ரல்-மே ஐரோப்பிய பயணத்தில் உணர முடிந்தது.

சில தோழமை அமைப்புகளுடன் இணைந்து தலித் பிரச்சனையைக் கடந்த ஐ.நா. அரங்கில் கொண்டுவர முயற்சித்தது எனக்குக் கிடைத்த தனி அனுபவம். தலித் பிரச்சனையை உலக அரங்கில் உரக்க ஒலிக்கச் செய்ய நாம் இன்னும் நெடுந்தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது என்பதை ஆழமாகவும் அதிகமாகவும் உணர்ந்தேன். அப்படி ஒலிக்காமல் இருக்கவும் "சாதி வெறியர்கள்" எடுக்கும் முயற்சிகளையும் காண முடிந்தது. இதற்கும் தாழ்த்தப்பட்டோரையே உபயோகிப்பது வேதனைக்குரியது. இத்தகைய ச(ா)தி திட்டங்கள் இயக்கவாதிகளுக்கு ஒரு சவால்!

எனவே களத்தில் உள்ளவர்கள் தொடக்கத்திலேயே களைகளைக் கிள்ளியெறிய வேண்டும். மாண்புமிகு மண்டேலாவின் முப்பது ஆண்டு சிறைவாழ்வு நம்மில் பற்றியெரியும் விடுதலை தீயின் திரியாக அமையட்டும். "வாழ்வது ஒருமுறை, வாழ்த்தட்டும் தலைமுறை"யென செயல்படுவோம்!

*என்றும் களம் நிற்கும்.*



படிப்பகம்

# குமுறி எழும் குருவாடி

மேல்துளி அரசாணி மங்கலம், இரும்பேடு ஆகிய கிராமங்களுக்கு நடுவில் 30 தலித் குடும்பங்களே உள்ள கிராமம் குருவாடி. இக்கிராமம் உத்திரமேரூர் தாலுக்கா காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. குருவாடி தலித் மக்கள் சாதி இந்துக்களின் வயல்களில் விவசாய கொத்தடிமைகள்.

இக்கிராமத்தைச் சார்ந்த சரிதா என்ற தாழ்த்தப்பட்ட மாணவி கடந்த ஏப்ரலில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு எழுதியவள். கடந்த சில மாதங்களாக, குருவாடி யிலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவிலுள்ள உத்திர மேரூரில் ஜெராக்ஸ் கடையில் மாதம் 700 ரூபாய் சம்பளத்திற்கு வேலை செய்து வருகின்றாள். இவர் காலை 7.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டால் இரவு 8.30 மணிக்குத்தான் வீடு வந்து சேருவார்.


சரிதா மானபங்க படுத்தப்பட்ட இடம்

06-05-2000 அன்று வழக்கம் போலவே வேலையை முடித்து விட்டு இரவு 8.30 மணிக்கு பேருந்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். பேருந்திலிருந்து அரசாணி மங்கலம் கூட்ரோட்டில் இறங்கி வீடு நோக்கி நடந்து கொண்டிருந்த சரிதாவின் இடையில் யாரோ கை வைப்பதுபோல உணர்ந்தாள். திடுக்கிட்டு திரும்புவதற்குள் மேல்தூளி கிராமத்தைச் சார்ந்த சாதி இந்துவான சிவா என்பவன் சரிதாவை குண்டுகட்டாக தூக்கிக்கொண்டு மறைவான இடத்திற்கு சென்றான். சரிதா தீவிரமாய் போராடினாள் ஆனால் அந்த காமவெறிப் பிடித்த மிருகத்திடமிருந்து விடுபட முடியவில்லை கெஞ்சியும் பயனேதுமில்லை. சரிதா அணிந்திருந்த துப்பட்டாவை வைத்து வாயில் பொத்தி பலாத்காரம் செய்ய முற்பட்டான். கடைசியில் சரிதா அலங் கோலமான நிலையில் அவனிடமிருந்து திமிறி அவனைப் பற்களால் கடித்துவிட்டு வீட்டிற்கு ஓடிவிட்டாள். நடந்தவற்றை தன் பெற்றோரிடம் கதறியழுதபடியே கூறினாள்.

மறுநாள் காலை 10.00 மணிக்கு சிறுமியின் பெற்றோர் உத்திரமேரூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தனர். காவல்துறையினரும் சாதாரணமாகவே வழக்குப் பதிவு செய்து, பாதிக்கப்பட்ட மாணவியை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அனுப்பினர்.


சரிதாவின் பெற்றோர்கள்

இச்சம்பவத்தை கேள்விப்பட்ட அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க நிர்வாகிகள் பாதிக்கப்பட்ட மாணவி சரிதாவையும், பெற்றோரையும் சந்தித்து சம்பவத்தை விசாரித்தனர். பிறகு உத்திரமேரூர் காவல் நிலையத்திற்கு சென்று எஸ்.சி. எஸ்.டி வன்கொடுமை தடுப்புச்சட்டத்தில் வழக்கு பதிவு செய்யும்படி வற்புறுத்தினர். அதன் பேரில் சிவா மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஆனால் இந்நாள் வரையில் குற்றவாளி சிவா காவல்துறையினரின் கண்ணில் மண்ணை தூவிவிட்டு ஆட்டம் காட்டுவதை நினைத்தால் நமக்கு ஆச்சரியமாக உள்ளது.

குற்றவாளி சிவாவை சிறையிலடைத்து உரிய தண்டனையை பெற்றுக் கொடுத்தால் தான், காவல் துறையினரின் மீது மக்கள் கொண்டிருக்கும் பல சந்தேகங்கள் மறையும்!

– வௌவால்

www.padippakam.com

# நமக்கான மனநிலை

அன்புள்ள தலித் தம்பி !

இந்தக் கடிதம் மூலம் உன்னுடன் உரையாட ஒருவாய்ப்பை அண்ணன் இயேசுமரியான் - இயக்க நிறுவனர் தலைவர் ஏற்படுத்தியிருக்கிறார். இதை வாசித்து உன் மனதில் படும் எண்ணங்களை நீ ஆசிரியருக்கு கடிதமாக ஓர் அஞ்சலட்டையில் எழுதுவாய் என எதிர்பார்க்கிறேன்.

தற்செயல் நிகழ்வாக நாம் தலித் சாதியில் பிறந்தோம். அதற்கு விதி காரணம் என்பவன் முட்டாள்! அயோக்கியன்! பெரியார் பாஷையில்... சாதி என்கிற சதிவலைப் பின்னலைத் திட்டமிட்டுக் கட்டிக்காக்கிறது. கல்யாணம்-சாதி-உபசாதிப்பாணி... நில உடைமை! சாதிரீதி வாழ்க்கை!! 482-க்குமேல் பதிவு செய்த ஜாதிச் சங்கங்கள்...... ஜாதிச்சங்கத்தில் ஒரு கால் அரசியல் சேற்றில் மறு கால் என கோணல் நடை நடக்கும் தலைகுனிவுத் தமிழ் இளைஞர்கள்... நடுவே நீ ஒரு வித்தியாசமான இயக்கவாதி !

நமக்குப் போராட்டமே வாழ்க்கை சுயமரியாதை - சுய மாண்பு - மனிதநேயம் மறுக்கப் பட்ட குக்கிராமச் சேரிப்புற வாழ்வு! வாழ்வை வசமாக்கிக் கொள்ள போராட வேண்டிய வாழ்க்கை. நமது கனவுகள் கற்பனைகள் எல்லாவற் றுக்கும் கடைசி எல்லையாய் வரம்பு கட்டுகிற சாதி. சாதித்தமிழன் - பாதித்தமிழன் - மிதித்தமிழன்- சாணக் குவியல் மீது கட்டிய அரண்மனையாய் அவர்களுக்கு இந்த வாழ்க்கை! குடியரசுத்தலைவர் உரை வாசகத்தில் அப்படியொரு வாசகம்! கடந்த மக்கள் களம் இதழில் வாசித்திருப்பாயே! சாதி என்பது ஓர் மனநிலை என்றார் நம் அண்ணல் அம்பேத்கர் நாம் கோருவது சாதி ஒழிக்கப்பட்ட வாழ்க்கை !

அண்மையில் 1999-இல் தமிழ் நாட்டளவில் நடைபெற்ற தலித்மக்கள் மீதான வன்கொடுமை களைத் தமுக்கடிக்கும் ஒரு தகவல் வாசித்தேன் -தேவர் சமுகத்தவர், முஸ்லிம்கள், பிற்பட்டசாதியினர் நாடார், வன்னியர், ஆசாரி, மூப்பனார், போன்ற பல நிலையினரும் வன் கொடுமை இழைத்த விவரங்கள்! பட்டியல்கள் பக்கம்தோறும். அதில் அரசு வன்முறையும் அடங்குமாம்! காரணம் என்ன என்று தெரிந்தால் உன் அறச்சினம் பொங்கி ஆகுதி ஆகிவிடும்! தலித்துகளுக்குப் பாதிப்பு என்றால் வெறும் எண்ணிக்கை விவரம்தான்.

சட்டரீதியான அரசமைப்புச் சட்டத்தில் உத்தரவாதம் செய்து தரப்பட்டுள்ள ஜனநாயக உரிமை மீறல்கள் எல்லாம்! நடைபாதை ஆக்கிரமிப்புக்கு, எதிர்ப்புக்கு சாராய விற்பனை எதிர்த்ததற்கு, கோவில் திருவிழாவில் சமத்துவம் கோரிய தற்கு, சாதி இந்துக்களுக்கு மரணத் தின்போது புதை குழிவெட்ட மறுத்ததற்கு! சாதி மறுப்பு(கலப்பு) மணம் செய்ததற்கு! பொதுக் குழாயில் குடிநீர் பிடித்ததற்கு! கோவிலில் சாமி கும்பிட்டதற்கு! பொது இடத்தில் செருப்புக்கடை போட்டதற்கு! பாலியல் வன் முறை எதிர்ப்புக்கு! தலித் தலைவர்களை




படிப்பகம்

www.padippakam.com

இழிவுபடுத்தியதைக் கண்டித்ததற்கு! அமைப்பாக ஒன்று திரண்டதற்கு! பேருந்தில் சமத்துவமாக உட்கார்ந் ததற்கு! ஸ்ரீராம் சிட்பண்டிடம் பணம் திரும்பக் கேட்டதற்கு.... என்று குடியுரிமைக் காரண அடிப்படையில் உரிமையை நிலை நாட்ட முயன்றவர் மீது வன்முறைகள்! அடிதடிகள்! படுகொலைகள்! கைதுண்டிப்பு கள்! வீடு இடிப்புகள்! பலாத்காரங்கள்! மின்சாரம் பாய்ச்சி கொலைகள்! இன்னும் என்னென்னவோ வன்கொடுமைகள்.

நாம் புதுயுகம் நோக்கி அடியெடுத்து வைக்கிற நேரத்தில் பார்!

சில இடங்களில் வழக்கு பதிவாகியுள்ளது. சில இடங்களில் அரசு நடவ டிக்கை இல்லை சில இடங்களில் பாதிக்கப்பட்ட தலித்துகள் மீதே வழக்குப் பதிவு என்று அந்தப்பட்டியல் சொல்லுகிறது! சாதித்தமிழ்க் காட்டுமிராண்டிகள் இன்னும் நாகரிகம் அடைய வில்லையே!



அரசு செய்துவரும் சமத்துவபுரம் நல்ல சிந்தனை தான்! சீரிய செயல்பாடு தான்! தமிழகமே சமத்துவபுரமாகிவிட வேண்டும் என்கிற இலட்சியம் உயர்ந் ததுதான்! ஆனால் எத்தனை நூறு சமத்துவ புரங்கள் வந்தும் தமிழ் நாட்டில் ஒரு சேரி கூட ஒழியவில்லையே ஏன்? என்று நீ கேட்பது நியாயமானது தான்! உன்னுள் விழிப் புணர்வு வந்துவிட்டது. என்பதை விமர்சன மனநிலை உன்னிடம் இருப்பதன் மூலம் அறிய முடிகிறது.

ஒரு காலத்தில் உன் மனதில் இருந்த தாழ்வு மனோபாவங்கள் எத்தனை! எத்தனை! என் நிறம் கறுப்பு! மற்றவர்களை விட நான் தாழ்ந்தவன்(ள்) அடுத்தவரை விட நான் ஏழை! மோழை! கோழை உணர்வுகள்! என் பெற்றோர்கள் கைநாட்டுகள்! ஏன் என்னைப் பெற்றார்கள்? இவர்கள்தான் என் அம்மா அப்பா என்று அறிமுகம் செய்யவும் வெட்கம்! படித்தாலும்-பள்ளிக்கூடம் போனாலும் - உயர்கல்வி படித்தாலும் இவன் சேரிப் பையன்! இவ சேரிப் பொண்ணுதானே! என்கிற எகத்தாளங்கள்! காதுபடப் பேசும் பேச்சுக்கள்! மற்றச்சாதிகள் நம்முடன் பழக மாட்டார்கள்! வீட்டு விசேஷங்களில் பங்குகொள்ள வர மாட்டார்கள்! வந்தாலும் சமமாக உட்கார்ந்து உண்ண மாட்டார்கள்!

சமுக தூரம் கடைப்பிடிப் பதில்தான் சாதித்தமிழர்கள் கடைப்பிடிக்கிற எழுதாத சட்டங்கள் எத்தனையோ! நம்மை ஒடுக்கு வோர்கள் பிரச்சனை என்ன? இன்றைய தலித் இளைஞர்களுக்கு வீரம் வந்துவிட்டது கல்வி வளர்ச்சி வந்துவிட்டது. இயக்கமாகச் செயல் படுகிற கூட்டுணர்வு பிறந்துவிட்டது. கருப்புக் கதிரவனாம் அம்பேத்கர் சொன்னதுபோல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆளுகை புரிகிற ஆர்வம் தோன்றிவிட்டது.! சட்டம் படித்து விட்டுச் சமத்துவம் கோருகிற துணிச்சல் உண்டாகிவிட்டது. நமக்குச் சமமாகவும் - நமக்கு மேலாகவும் இவர்களை வளர விடலாமா? எனக்குக் கீழ் நீ இரு! என்பது தான் சாதி வெறியர்கள் மனநிலை

நேற்றுவரை தலித் இளைஞர் களை அரசியல் கட்சிகளின் அடிமட்டத் தொண்டர்களாக - பல்லக்குத் தூக்கிகளாக

(தொடர்ச்சி 17 - ம் பக்கம்)



படிப்பகம்

www.padippakam.com

பத்தாம் வகுப்பு தேர்வு எழுதி விட்டு வீட்டு வேலையை கவனித்து வந்தாள் திருவண்ணாமலை மாவட்டம் கெங்காவரம் கிராமத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட சிறுமி சித்ரா.

# நீதிபதி கற்பழித்தான்?

இப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் ஜவ்வாது மலையில் விறகு பொறுக்கி விற்றால்தான் ஜீவனம்! அன்றாடங்காய்ச்சிகள் தன்னுடைய மகள் பெரியவளாகிவிட்டாள் என்பதால் அவளை நல்ல இடத்தில் மண முடித்து கொடுத்து விடவேண்டும் என ஆசைப்பட்டனர் சித்ராவின் பெற்றோர் ஜெயராமன் மற்றும் பத்மாவதி.

இறுதியாகப் போளூர் வட்டம் மட்டவெட்டு கிராமத்தைச்சேர்ந்த கண்ணன் என்பவருடைய மகன் சேகர் என்பவருக்கு நிச்சயம் செய்தார்கள். 09-04-2000 என திருமணத்தேதியும் முடிவு செய்யப்பட்டது. சித்ராவின் பெற்றோர்கள் அன்றாடங் காய்ச்சிகள் கடன்களை வாங்கி மகளின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். திருமண அழைப்பிதழையும் உறவினர்களுக்குக் கொடுத்து விட்டனர்.

திருமணத்திற்குச் சிறிதுநாட்களே உள்ள நிலையில் சித்ரா தன்னுடைய தோழிகளுடன் சாதி இந்துக்கள் வாழும் அருகிலுள்ள கலக்காடு என்ற கிராமத்திற்கு கூலி வேலைக்கு சென்றாள். அங்குதான் அவளுடைய சந்தோஷமான வாழ்க்கைக்குள் சாத்தான் புகுந்தான். அக்கிராமத்தில் கவுண்டர் இனத்தைச் சார்ந்த நீதிபதி என்பவன் சித்ராவை ஆசைபடுவதாகவும் தன்னுடன் வந்துவிடு எனவும் வற்புறுத்தினான். திடுக்கிட்ட சித்ரா "என் கல்யாணத்துக்கு ஏற்பாடு செஞ்சிட்டாங்க. நீ சொல்றத என்னால ஏத்துக்க முடியாது" என சொல்லிவிட்டு வீடு திரும்பி விட்டாள். சம்பவத்தால் பயந்துபோன சித்ரா வெளியே எங்கும் செல்லாமல் வீட்டிற்குள்ளேயே அடைபட்டு கிடந்தாள்.

திருமண நாள் நெருங்கியது வீட்டிலுள்ளவர்கள் ஆளுக்கொரு வேலையாக அலைந்து கொண்டிருந்தனர். மார்ச் 25-ம் தேதி சித்ராவும் தன்னுடைய தோழிகளுக்கு பத்திரிக்கை வைப்பதற்காக அருகிலுள்ள ஆதமங்கலம்-புதூர் கிராமத்திற்கு சென்று விட்டு ஏரி வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். மறைந்திருந்து திடீரென வந்த நீதிபதி சித்ராவின் வாயை பொத்தி, தூக்கி அருகிலிருந்த புதருக்குள் போட்டு கற்பை சூறையாடினான், சின்னாபின்னமாக்கினான். பிறகு அங்கிருந்து வலுக்கட்டாயமாக கடத்திக் கொண்டு சென்னை அண்ணாநகருக்கு சென்றான்.

மகளை காணவில்லையென பல இடங்களில் தேடி அலைந்தனர் சித்ராவின் பெற்றோர். சித்ரா காணாமல்போன செய்தி மாப்பிள்ளை வீட்டாருக்கும் தெரிய அவர்கள் சித்ராவின் பெற்றோரை நச்சரித்து எச்சரித்தனர்! வேறு வழியில்லாமல் சித்ராவின் பெற்றோர்கள் தன்னுடைய மற்றொரு மகளான சித்ராவின் தங்கையை அதிரடி நடவடிக்கையில் மாப்பிள்ளைக்கு மணம் செய்து வைத்தனர்.

நீதிபதியுடைய மாமன்கள் ஜெகநாதன், ஜெமினி ஆகியோர் நீதிபதி சென்னையில் இருப்பதை அறிந்து அங்குச் சென்றனர். நீதிபதியையும், சித்ராவையும் தேடி பிடித்து



படிப்பகம்

www.padippakam.com

"ஊரில் பஞ்சாயத்து பேசி முடிவெடுத்து விட்டோம். ஒன்றும் கவலைப்பட தேவை யில்லை. நீங்கள் ஊரிலேயே வந்து வாழுங்கள்" என பேசி அழைத்தனர். சித்ராவும் அவர்களுடன் வந்தாள். ஊருக்குச் சுமார் 4 கி.மீ. தொலைவி லேயே "பஸ்சிலி ருந்து இறங்கி எரி வழியாக சென்றுவிடலாம். பஸ் ஸ்டாப்பில் இறங்கி சென்றால் எல்லோரும் அசிங்கமாக நினைப்பார்கள்" என்று கூறி சித்ராவையும் இறக்கிவிட்டார்கள்.



சிறிது தூரம் நடந்து வந்த பிறகு குட்டமாணிக்கம் என்பவருடைய பம்ப் செட்டில் சித்ராவை அடைத்துவிட்டு நீதிபதியை வீட்டிற்கு அனுப்பி விட்டனர். அவனும் எவ்வித சலனமுமின்றி வீட்டிற்குச் சென்று விட்டான். பிறகு நடந்தவற்றை சித்ரா அழுதபடியே நம்மிடம் கூறினாள். "ஏப்ரல் 3-ம் தேதி சாயங்காலம் என்னையும், நீதிபதியையும் சென்னையிலிருந்து அழைத்து வந்தனர். அவனை மட்டும் வீட்டிற்கு அனுப்பிவிட்டு என்னை ஒரு பம்ப் செட்டில் பூட்டி அடைத்தனர். அன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு நீதிபதியின் மாமன்கள் ஜெமினி, ஜெகநாதன் மற்றும் ஜெமினியின் மனைவி மூவரும் மீண்டும் வந்து என்னை அடித்து கொடுமைப்படுத்தினர்.

பற நாயே உனக்கு இவ்வளவு திமிரா? அவன் உன்னைக் கூப்பிட்டாலும் உனக்கு எங்கடி போச்சு புத்தி என அடித்து உதைத்தனர். அன்று இரவு முழுவதும் மீண்டும் என்னை பூட்டி அடைத்தனர். மறுநாள் ஏப்ரல் 4-ம் தேதியும் அப்படியே நடந்தது. ஏப்ரல் 5-ம் தேதி மீண்டும் வந்து அடித்து கொடுமைப்படுத்தினர். நான் அவங்க கால புடிச்சு கெஞ்சினேன். என்னை விட்டுடுங்க நான் எங்கேயாவது போய் விடுகிறேன் என கதறி அழுதேன். மூன்று நாட்களும் பட்டினியாகவே இருந்ததால, அவங்க செஞ்ச சித்ரவதைய தாங்கவே முடியல. நான் எவ்வளவோ கெஞ்சியும் விடாம என்னுடைய இடுப்பில் கயிறை கட்டி கிணற்றில் இறக்கினர். மேலே இழுப்பதும் கிணற்றில் விடுவதுமாக பலமுறை செய்தனர்.

கடைசியில் என்னை மேலே இழுத்து ஏற்கெனவே அரைத்து வைத்திருந்த ஒட்டந்தழையை வலுகட்டாயமாக என் வாயில் ஊத்தினாங்க சிறிது நேரத்திலேயே நான் மயக்கமாகிப் போனேன் பிறகு என்னை எங்கள் ஊர் எல்லையில் போட்டுவிட்டு சென்று விட்டனர். அங்கிருந்து மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு உயிர் பிழைத்தேன்" என தனக்கு நேர்ந்த கொடுமைகளை நம்மிடம் எடுத்துச்சொன்ன சித்ரா தனக்கும், தன் குடும்பத்தாருக்கும் பாதுகாப்பு வேண்டுமெனவும், பாதிக்கப்பட்ட எனக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென ஏக்க பெரு மூச்சுவிட்டார். "சாதி இந்துவான நீதிபதியின் குடும்பம் கொலைகார குடும்பங்க" என பலரும் சொன்னது நம்மை அதிர வைத்தது.

ஒரு தாழ்த்தப்பட்ட சிறுமிக்கெதிராக இவ்வளவு கொடுமைகள் நடந்த பிறகும் காவல்துறை மிகவும் மெத்தனமாகவே இருப்பதுதான் கோபத்தை கிளருகிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் உயிரையும், கற்பையும், உடமைகளையும், மிக மலிவாக இந்த காவல்துறையினரும், அரசாங்கமும் நினைப்பது தலித் இளைஞர்களுக்குச் ஒரு சவாலாகவே உள்ளது.

*- சிந்தை.ஆர்*



படிப்பகம்

www.padippakam.com

# சுண்டூரை மிஞ்சிய புளியங்குடி

**மே 26**, புளியங்குடி கிராமம் மதியழகன், காந்தி, வெள்ளையன் ஆகிய அப்பாவி தலித்துகள் சாதி இந்துக்களின் சாதி வெறிக்கு காவு கொடுக்கப்பட்டனர். இம்மூவரும் சிந்திய இரத்த சோகத்தில் மூழ்கிபோன ஒரு இருண்ட நாள்! இம்மூவரின் உயிரை பறி கொடுத்துவிட்டு மீளா துயரத்தில் மூழ்கிப் போனது இம்மூவர் குடும்பங்கள் மட்டுமல்ல, ஒட்டு மொத்த தாழ்த்தப்பட்ட சமுதாயமே.

கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட சிதம்பரம், காட்டுமன்னார் கோயில், குமராட்சி பகுதிகள் முழுவதுமே தாழ்த்தப்பட்ட மக்களின் ஆவேசத்தினால் பதட்டமாகி போயிருந்தன. தலித் இளைஞர்கள் ஆடுகளைப் போல் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கான காரணத்தை செய்தித் தாள்களும், தொலைக்காட்சிகளும் வெவ்வேறு விதமான வகையில் தெரிவிக்க உண்மை நிலைமை அறிய களமிறங்கினோம் நாம்.

சிதம்பரத்திலிருந்து புளியங்குடி செல்ல போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்ததால், நண்பர் ஒருவரின் இரண்டு சக்கர வாகனத்தில் பயணம் செய்த நமக்கு கண்ணில் பட்டதெல்லாம் காக்கி சட்டைகளே. பல இடங்களில் நடந்த கடும் விசாரணைகளுக்குப் பிறகு புளியங் குடியை அடைந்தோம். அக் கிராமமே மௌனமாகிப் போயிருந்தது. நிரந்தர ஏழ்மையும், நீங்காத சோகமும் ஒவ்வொரு தாழ்த்தப்பட்டவர்களின் முகத்திலும் குடி கொண்டிருந்தது.

புளியங்குடி கிராமம் சுமார் 150 தாழ்த்தப்பட்ட குடும்பத்தினரையும், 1500 படையாச்சி என்கிற சாதி இந்துக்களின் குடும்பங்களையும் உள்ளடக்கியது. படையாச்சிகளை விட சொற்ப எண்ணிக்கையில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரதான தொழிலே சாதி இந்துக்களின் நிலங்களில் கூலி விவசாயம் செய்வது. இம்மக்களுக்கு சொந்தமாக நிலங்கள் இல்லை. அங்குள்ள அனைத்து நிலங் களும் சாதி இந்துக்கள் வசமே உள்ளது. அதோடு கள்ளச்சாராயம் காய்ச்சுவதும் சாதி இந்துக் களின் முக்கிய தொழில். சாதி இந்துக்களின் பணபலமும் படைபலமும் தலித் மக்களை ஒடுக்கும் வலிமையான ஆயுதங்கள்!



மதியழகனின் மனைவி புனிதா குழந்தைகளுடன்

நடந்து முடிந்த ஈவு இரக்கமற்ற கொடூரத்தை நாம் விசாரிக்கும் போது தாழ்த்தப்பட்ட மக்களின் முகத்தில் பயம் கலந்த குமுறல்கள்



படிப்பகம்

www.padippakam.com

தென்பட்டன. கொலை செய்யப்பட்டவர்களில் வெள்ளையன், காந்தி ஆகிய இருவரும் உடன் பிறந்தவர்கள்.



காந்தியின் தாய், மனைவி, தங்கை

காந்திக்கு திருமணமாகி 8 மாதங்களே கடந்துள்ளன. ஊனமாக பிறந்துள்ள கைக் குழந்தையுடன், 4 குழந்தைகளை வைத்துக் கொண்டு பேச முடியாமல் பிரமை பிடித்தவர் போல் வெறித்தபடியே இருக்கும் மதியழகனின் மனைவி புனிதாவையும், தான் பெற்ற பிள்ளைகளில் காந்தி, வெள்ளையன் ஆகிய இரண்டு செல்வங்களையும் பறிகொடுத்துவிட்டு துடித்துக்கொண்டிருக்கும் பெற்றோர்களின் கதறலும் நம்மை கலங்கடித்தது. இம்மூவரின் வீடுகளில் வேலைக்கு சென்று சம்பாதித்து வர ஆட்கள் இல்லாததால் இவர்கள் வீட்டு அடுப்பும் பூத்து போயிருந்தன!

'மல்லிகை மாதர் சங்க' தலைவி வசந்தா நம்மிடம், "சார், இங்கு படையாச்சிகளைவிட தாழ்த்தப்பட்டவங்க ரொம்ப குறைவுங்க இதனாலயே படையாச்சிங்க எங்கள் அடிமையா கொடுமைபடுத்துவதும் இங்குள்ள வயசு பொண்ணுங்கள சர்வ சாதாரணமாகவே கற்பழிப்பதும், இந்த விஷயம் வெளியே தெரிஞ்சா உடனே பஞ்சாயத்தை கூட்டி, தெருவுல போற படையாச்சி ஆம்பளைங்க விபச்சாரத்திற்கு அழைப்பதாக பாதிக்கப்பட்ட பெண் மீதே குற்றம் சுமத்தி ஆயிரம், ரெண்டாயிரம்னு அபராதம் விதித்து தண்டனை கொடுப்பது ரொம்ப சகஜங்க.

படையாச்சி இனத்தை சார்ந்த ஆம்பள பையனுங்க இங்குள்ள தாழ்த்தப்பட்ட பெண்களை காதலிப்பதாக கூறி, கற்பழித்துவிட்டு கழட்டிவிடுவதும், பிறகு அந்த பெண் கர்ப்பமாகி நடுத்தெருவில் நிற்பதும் அடிக்கடி இங்க நடக்கறதுதானுங்க. இவங்க செய்ற அக்கிரமத்தை எங்களால எதிர்த்து கேட்கவும் முடியாது. அப்படியே நாங்க குமராட்சி காவல் நிலையத்தில புகார் கொடுத்தாலும் அதைப்பற்றி போலிசும் கண்டுக்காது.

இங்குள்ள படையாச்சிகளுக்கு சாராயம் காய்ச்சிறதுதான் முக்கிய தொழில் இதனால இங்குள்ள குடும்பங்களும் சீரழிஞ்சு போயுள்ளன. இதை பற்றி நாங்க மாதர்ச்சங்கம் சார்பா பலமுறை பல இடங்களுக்கு மனு கொடுத்தோம், ஒரு பயனுமில்லை. போன 23-ம்தேதி படையாச்சிங்க ஊரல் போட்ட சாராய பானையை திருநாவுக்கரசு, அன்புராஜ், விநாயகமூர்த்தி, பாலசுந்தரம் ஆகிய தலித் இளைஞர்கள் உடைத்து விட்டதாக கூறி பஞ்சாயத்தை கூட்டினாங்க. அதுல இவங்க ஒவ்வொருத்தருக்கும் தலா இரண்டாயிரம் ரூபாய் அபராதம் போட்டாங்க. செய்யாத தப்புக்கு நாங்க ஏன் அபராதம் கட்டணும்னு எங்க பையனுங்க மறுத்துட்டானுங்க. இதனால இந்த படையாச்சிங்க 'பற நாய்களுக்கு எங்கிருந்துடா இந்த தைரியம் வந்துச்சுன்னு' ரொம்ப கொதிச்சுபோனாங்க.

இந்தச் சம்பவம் முடிந்த மறுநாளே 24-ம் தேதி இராத்திரி பிரபாவதி என்கிற தாழ்த்தப்பட்ட பெண்ணை கார்த்திக் என்கிற படையாச்சி பையன் வீடு புகுந்து கற்பழிச்சுட்டான். இது அக்கம் பக்கத்திலே இருந்தவங்க பார்த்துட்டு அவனை கையும், களவுமாக பிடிச்சாங்க. அதற்குள்ளேயே இந்த செய்தி படையாச்சிங்க இருக்கிற பகுதியில் பரவி அவங்க நூறு பேருக்கு மேல வந்து அவனை கூட்டினு போயிட்டாங்க.



தெய்வீகதாஸ்



படிப்பகம்

www.padippakam.com

மறுநாள் விடிஞ்சதும் காலையில் எங்க மாதர் சங்க பெண்கள் பாதிக்கப்பட்ட பெண்ணையும் கூட்டிக்கொண்டு பஞ்சாயத்துக்கு போனோம். பஞ்சாயத்துல, பாதிக்கப்பட்ட எங்க பெண்ணை கற்பழிச்சவனே கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்னு சொன்னோம். அதை அவங்க யாரும் ஏத்துக்கல. எவ்வளவு திமிரு இருந்தா இந்த பேச்சு பேசுவிங்கனு எங்களையே அடிக்க வந்தாங்க. வேணும்னா ஆயிரம், இரண்டாயிரம் கொடுக்க சொல்றோம்னு பஞ்சாயத்துல சொன்னாங்க. நாங்க அதை ஒத்துக்கல. குமராட்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். இதனால படையாச்சிகள் எங்க மேல ரொம்பவும் ஆத்திரம் பட்டாங்க.

இந்த ரெண்டு சம்பவங்களாலும் எங்கமேல கோபம் கொண்ட படையாச்சிங்க எங்களை எப்படியாவது பழிவாங்கணும்னு நினைச்சிட்டு இருந்தாங்க. இந்த நிலையிலதான் மறுநாள் இரவு அதாவது 26-ம் தேதி காந்தி, வெள்ளையன், மதியழகன் மூன்று பேரும் கூலி வேலைக்கு போயிட்டு வந்து அசதியா ஆல மரத்துக்கடியில காத்தோட்டமா தூங்கிட்டு இருந்தாங்க. மறுநாள் விடிஞ்சதும் பார்த்தா மூன்று பேரும் கொடுமையான முறையில் கழுத்தறுக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் செத்து போயி கிடந்தாங்க. ஒட்டு மொத்த தலித் மக்கள் மீதிருந்த வெறியை அந்த மூன்று அப்பாவிங்க மேல காட்டிட்டு போயிட்டானுங்க. அந்த மூணுபேரும் கிடைக்கிலனா, ஊரையே கொளுத்திட்டிருப்பானுங்க. எத்தனை உசுரு போயிருக்குமோ!" என பதட்டத்துடன் விளக்கினார்.



மாதர் சங்கத்தலைவி வசந்தா

இந்தக் கொடூரமான கொலைக்கான மூலகாரணத்தை அறிய நாம் மேலும் விசாரித்த போது, கலியமூர்த்தி என்கிற ஒரு பெரியவர் "நான் பொறந்ததிலிருந்தே இந்த ஊர்லதாங்க இருக்கிறேன். அப்போதிலிருந்து இன்று வரையிலும் படையாச்சிங்க எங்களை பண்ற கொடுமையை எப்படிங்க சொல்றது. வயசு வித்தியாசமில்லாம சின்ன பையனுங்க கூட எங்களை வாடா, போடான்னுதான் கூப்பிடுவாங்க. எதற்கெடுத்தாலும் பற நாய்களேனுதான் திட்டுவாங்க. இன்னைக்கு வரைக்கும் நாங்க யாரும் அவங்க தெருவுல செருப்பு போட்டுனு போகக்கூடாது. வாட்ச் கட்டக்கூடாது, புதுசா சட்டை போட்டுனு போகக்கூடாது.



மூவர் கொலை செய்யப்பட்ட இடம்

டீக்கடையில் நாங்க யாரும் பெஞ்சில உட்கார கூடாது. எங்களுக்கு தனி டம்ளர்தான் ரேஷன் கடையும் அவுங்க பகுதியில்தான் இருக்கிறது. அவங்க சாதி, சனம் ரேஷன் வாங்கின பிறகுதான் நாங்க போயி வாங்கணும், இதனால எங்களுக்கு எந்த பொருளும் முழுசா கிடைச்சதே கிடையாது! நாங்க அதிகமாக சர்க்கரையை வாங்கறதே கிடையாது. ஆனா நாங்க மாசாமாசம் சர்க்கரையை வாங்கினதா எங்க அட்டையில் எழுதிடுவாங்க.

எங்க புள்ளைங்க பள்ளிகூடத்துக்கு அவங்க இடத்துக்குதான் போகணும், அங்க எங்க புள்ளைங்களை தனியா உட்கார வைப்பாங்க. பஸ்ல நாங்க அவங்க பக்கத்துல உட்கார கூடாது. அப்படியும் மீறி உட்கார்ந்தா அடி, உதைதான் விழும்" என அடுக்கடுக்காக தங்களுக்கு நேர்ந்து கொண்டிருக்கும் தீண்டாமை கொடுமைகளை விவரித்தார்.



படிப்பகம்

www.padippakam.com



தங்கசாமி

புளியங்குடிக்கு நேர்ந்த இந்த சோகமான முடிவு இன்று, நேற்று உருவான பிரச்சனையல்ல, காலகாலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்துவரும் தீண்டாமை கொடுமைகளின் உச்சகட்டம்தான்.

“1947-ம் ஆண்டு இது போன்றதொரு சம்பவம் நடந்தபோது ஐயா இளையபெருமாள் எங்கள் எல்லோரையும் பாதுகாப்பான இடத்தில் குடியமர்த்தினாரு. பிறகு இங்குள்ள படையாச்சி களுடைய நிலங்களில் வேலை செய்ய ஆட்கள் கிடைக்காததால், மீண்டும் இதுபோன்ற சம்பவம் நடைபெறாது நீங்கள் தைரியமாக ஊருக்குள் வாங்க என்று படையாச்சி அழைச்சி வந்தாங்க. ஆனா கொடுமைகள் போனபாடில்லை. கடைசியில மூன்று உயிரை பறிகொடுத்துட்டு நிக்கறோம்” என நம்மிடம் கதறினார் தங்கசாமி.



காந்தி தாய்மாமன் பாலு

“எங்களுக்கு இந்த ஊரில் இன்னும் பாதுகாப்பு கிடையாது. அதனால எங்கள பாதுகாப்பான இடத்துல குடியமர்த்தினால்தான் நிம்மதியாக வாழ்வோம்.” என ஊரிலுள்ள அனைவரின் வாயிலிருந்தும் தவறாமல் வந்தது.



மதியழகன் தம்பி

படையாச்சி இனத்தைச் சார்ந்த கண்ணன் ஆசிரியர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் இராஜசவுந்திரபாண்டியன், கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் தலித் மக்களை கொடுமைபடுத்த தலைமை தாங்குபவர்கள் என்பது தெரிய வந்தது.

இக்கொடிய சம்பவம் நடந்தபிறகு பாதிக்கப்பட்ட புளியங்குடி கிராமத்திற்கு ஆறுதல் கூற வந்த அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் கடலூர் மாவட்ட தலைவர் தெய்வீகதாஸை நாம் தொடர்பு கொண்டபோது, “இது மேலவளவு போன்று இரண்டாவது பெரிய கொடுமையான சம்பவங்க. தலித் மக்களுக்கு இந்த நாட்டுல பாதுகாப்பே இல்லாத லட்சணத்தில குடியரசு பொன்விழா கொண்டாட்டங்கள் ஒரு கேடா? இந்த ஆட்சியில் மட்டுமல்ல எந்த ஆட்சியிலும், எந்த அரசியல் கட்சியாளும் தலித் மக்களுக்கெதிராக நடத்தப்படும் கொடுமைகளை தடுத்து நிறுத்த முடியாது. எங்களுடைய அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் இப்பிரச் சனையை இதோடு விடாது. மக்களை ஒன்று திரட்டி தொடர்ந்து போராட்டங்கள் நடத்துவோம். இனியும் பொறுத்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டோம் என கோபக் கனல் வீசினார்!



கலியமூர்த்தி

தாழ்த்தப்பட்ட மக்கள் போராட்டம் என்று அறிவித்தாலே, காவல் துறை அந்த பகுதி மக்களையே அள்ளிக் கொண்டு போய் சிறையில் அடைத்துவிடுகின்றது. ஆனால் இவ்வளவு பெரிய கொடிய கொலைகள் நடந்த பிறகும், கொலை செய்தவர்கள் சாதி இந்துக்கள் என்பதால் பெயருக்கு ஒரு சிலரை மட்டும் கைது செய்தி ருப்பது எந்த விதத்தில் நியாயம்? என புளியங் குடியை சுற்றியுள்ள வென்னையூர், மேல பருத்தகுடி, கீழ பருத்தகுடி, அதங்குடி, வெல்லூர், அரசூர் உட்பட பல கிராமங்களை சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் குரலெழுப்புகின்றனர்.

தமிழக அரசு புளியங்குடியில் நடைபெற்ற கொடூர கொலையைச் சாதாரண சம்பவமாக கருதாமல் தீண்டாமை கொடுமையின் உச்ச கட்டமாக கருதினால்தான், தான் அறிவித்துள்ள சி.பி.சி.ஐ.டி விசாரணை அர்த்தமுள்ளதாக இருக்கும். புளியங்குடி சாதி வெறியர்களை சட்டம் பாதுகாக்குமா? தண்டிக்குமா?

*- சிந்தை. ஆர்*



படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் சட்டத்திற்கு அறுவை சிகிச்சை

நமது அரசியலமைப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்ய முன்வந்துள்ளது பா.ஜ.க அரசு. இந்நிலையில் இச்சட்டத்தில் உள்ள சில அம்சங்களை தெரிந்து கொள்வது அவசியம். இந்த அம்சங்கள் மாற்றப்படவேண்டுமா?

16. 4). அரசுப் பணிகளில் பின்தங்கிய வகுப்பினருக்குப் போதிய வாய்ப்புத் தரப்படவில்லை என்று காரணம் காட்டி, அத்தகைய தரப்பினருக்கு ஒரு சில பணிகளை அல்லது நியமனங்களை அரசு ஒதுக்கீடு செய்வதை இந்தக் கோட்பாடு தடை செய்ய முடியாது.

5. சமயச் சார்புள்ள ஒரு பணியில் அல்லது அத்தகைய சார்புடைய அமைப்பில் அல்லது அதன் நிர்வாகக் குழுவில் அமர்த்தப்படுகின்றவர் அத்தகைய சமயத்தைச் சார்ந்தவராக அல்லது அத்தகைய சமயச் சார்புடையவராக இருக்க வேண்டும் என்று விதிக்கக்கூடிய சட்டம், இந்தக் கோட்பாட்டால் பாதிக்கப்படாது.

17. தீண்டாமை ஒழிக்கப்பட்டுள்ளது: மற்றும் அதனை எந்த வகையில் செயல்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தீண்டாமையின் விளைவாக எழும் எத்தகைய குறைபாடும் சட்டப்படி தண்டிக்கத் தக்க குற்றமாகும்.

18, படைப்பிரிவு அல்லது கல்வித் தகுதி ஆகியவற்றின் அடிப்படையிலன்றி, எத்தகைய பட்டத்தையும் அரசு வழங்கக் கூடாது.

2. இந்தியக் குடிமக்கள் எவரும் எந்த அயல் நாட்டிலிருந்தும் எத்தகைய பட்டத்தையும் ஏற்கக்கூடாது.

3. இந்தியக் குடிமகனாக இல்லையெனினும் அரசின் கீழ் பயன்பெறக் கூடிய அல்லது நம்பிக்கைக்குரிய பணியை ஏற்றுக் கொண்டுள்ள ஒரு நபர், குடியரசுத் தலைவரின் அனுமதியின்றி, ஒரு அயல் நாட்டிலிருந்து எத்தகைய பட்டத்தையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

4. அரசின் கீழ் பயன்பெறக்கூடிய அல்லது நம்பகமான பதவியை வகிக்கும் எவரும், குடியரசுத் தலைவரின் அனுமதியின்றி, எந்த அயல நாட்டிலிருந்தும் எத்தகைய பரிசையும் அல்லது உதியத்தையும் அல்லது பதவியையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

சுதந்திரமாக இருக்கும் உரிமை

19. 1. இந்தியக் குடிமக்கள் யாவர்க்கும்

(அ) சுதந்தரமாகச் சிந்திப்பதற்கும், எடுத்துச் சொல்வதற்கும்

(ஆ) ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடுவதற்கும் :

(இ) சங்கங்களையும் அமைப்புகளையும் ஏற்படுத்துவதற்கும்,

(உ) இந்திய எல்லைக்குள் எத்தகைய தடையுமின்றி நடமாடுவதற்கும் :

(ஊ) சொத்துக்களை வாங்கவும், விற்பனை செய்யவும், வைத்திருக்கவும் :

(எ) எந்தத் தொழிலையும் செய்தவற்கும், நடத்துவதற்கும், எந்தத் பணியிலும் ஈடுபடுவதற்கும் எத்தகைய வாணிபத்தையும் செய்வதற்கும் உரிமை இருக்கிறது.

(2) இந்தியாவின் ஒப்புயர்வற்ற தன்மையும் ஒருமைப்பாட்டையும் கருத்தில்கொண்டு, அயல்நாடுகளுடன் உள்ள நல்லுறவை கருத்தில்கொண்டு பொது ஒழுங்கு, பண்பாடு, ஒழுக்கம், நீதிமன்றங்களை அவமதித்தல், அவதூறு செய்தல், குற்றத்தை தூண்டுதல் ஆகிய செயலை அல்லது செயல்களை தடுப்பதற்கான சட்டத்தை இயற்றுவதையும் அந்த சட்டத்தின் மூலம் நியாயமான கட்டுப்பாடுகளை விதிப்பதையும் (1) ஆவது கிளையின் (அ) கூறு தடை செய்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

3. இந்திய தேசத்தின் ஒப்புயர்வற்ற தன்மையையும் ஒருமைப்பாட்டையும் கருத்தில் கொண்டு அல்லது பொது ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக முன்கூறப்பட்ட பிரிவில் சொல்லப்பட்ட உரிமைகளுக்கு ஒரு நியாயமான கட்டுப்பாட்டை விதிக்கக்கூடிய ஒரு சட்டம் உருவாக்கப்படுவதை அல்லது அப்படி உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தை அமுல்படுத்துவதை (அ) கிளை கூறில் உள்ளதை பாதிக்காது.

வழக்குரைஞர் : பழனிச்சாமி, செங்கை.

*(தொடரும்)*



படிப்பகம்

www.padippakam.com



# தமிழகத்தில் வறுமை ஒழிந்துவிட்டது!

வறுமை ஒழிப்பிற்கு கடந்த ஆட்சிகளில் ஒவ்வொரு அரசாங்கமும் வெவ்வேறான கொள்கைகளை கடைபிடித்தது. விளம்பரங்களின் மூலம் தங்களுடைய ஆட்சியில்தான் வறுமையே ஒழித்துக்கட்டப்படுகின்றன என பிதற்றுவது வழக்கம். ஆனால் இதுவரை வந்த வறுமை ஒழிப்பு திட்டத்தின் மூலம் இந்நாட்டில் வறுமை ஒழிந்ததாக தெரியவில்லை மாறாக வறுமையின் கோர தாண்டவம் தலை விரித்தாடுவதை நாம் பார்த்துவரும் காட்சி.

இன்றைய தமிழக அரசு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் "வறுமை ஒழிப்பு திட்ட" கணக்கெடுப்பு நடத்தியது. இதனுடைய நோக்கம் தமிழகத்தில் வறுமையால் உள்ளோரும், வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை யையும் கணக்கெடுத்து அதன் மூலம் அரசு திட்டங்களினால் வறுமையை ஒழிப்பதாகும்.

சாதாரணமாகவே, இவ்வகையான கணக் கெடுப்புகளையும், புள்ளி விவரங்களையும் சேகரிப்பதும் வருவாய்துறை அதிகாரிகளின் பணியாகும். இத்துறையில் உள்ள வி.ஏ.ஓ.; ஆர்.ஐ போன்றோர்களுக்குதான் மக்களின் பொருளாதார நிலையைப்பற்றி ஓரளவேணும் தெரியும். ஆனால் தமிழக அரசு முற்றிலும் வித்தியாசமாக 8-ம் வகுப்புகூட படித்திராத பால்வாடி ஆசிரியைகளை இக்கணக்கெடுப்பு பணிக்கு பயன்படுத்தியுள்ளது.

இதைவிட கொடுமையான விஷயம் என்னவென்றால் வறுமை கோட்டிற்கு கீழுள்ள வர்கள் யார் என்பதை கண்டறிய வித்தியாச மானதொரு அளவு கோலை தமிழக அரசு நிர்ணயித்துள்ளது. தனக்கென்று ஒரு மிதிவண்டி இல்லாதவரும், வீட்டிற்கு மின்சார இணைப்பு இல்லாதவர்களுமே வறுமை கோட்டிற்கு கீழுள்ளவர்கள் என்றும், அரசு நலதிட்டங்கள் தொகுப்பு வீடுகள், இலவச வேட்டி, சேலை போன்றவைகள் இவர்கள் மட்டுமே பெற தகுதியுடையவர்கள் என்று அறிவித்துள்ளது. அதற்கான அரசாணையையும் வெளியிட்டு விட்டது.

வறுமை கோட்டிற்கு கீழுள்ளவர்களின் தகுதிகளை நாம் உற்று நோக்குவோமானால், இன்று பெரும்பாலும் பழங்குடி இருளர் இனத்தைச் சார்ந்தவர்கள் தங்களுக்கென்று ஒரு சொந்த வீடு கூட இல்லையென்றாலும் தாங்கள் செய்கின்ற தொழிலுக்கென்று ஒரு உடைந்துபோன மிதிவண்டியை வைத்திருப்பார்கள். பேருந்தில் பயணம் செய்ய வசதி வாய்ப்பு இல்லாத நிலையில் பல மைல்தூரம் இந்த மிதிவண்டி யிலேயே சென்றுவிடுவார்கள்.

சொந்த வீடு இல்லாமல் மூன்று வேளை உணவு கிடைக்காமல் தவிக்கும் இந்தப் பழங்குடி இருளர் மக்கள் மிதிவண்டி வைத்திருகின்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, வறுமை கோட்டிற்கு கீழே இருக்க தகுதியற்றவர்களாகி விடுகின்றனர். இதனால் எந்தவித அரசு நலதிட்டங்களும் இவர்களுக்கு கிடைக்க வாயப்பு இல்லாமல் போய்விட்டது.

இதேபோல் இன்று பல கிராமங்களில், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில், ஒழுங்காக மூன்று வேளை உணவு கிடைக்க வில்லையென்றாலும், வீட்டிற்கு மின்சாரம் என்பது அத்தியாவசியமாகி வருகிறது. ஏழைமக்களும் மின்சார இணைப்பு வைத்திருக் கின்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் என்ற நிலையை இழந்து விடுகின்றார்கள்.

தமிழக அரசின் இந்த மோசடியான வறுமை ஒழிப்பு திட்டத்தினால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகி இருப்பது தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுமே என்பது தெள்ளத் தெளிவான உண்மை. இத்திட்டம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் உரிமைகளை பறிப்பதற்காக தீட்டப்பட்டதா?

இப்போதைய தி.மு.க தலைமையிலான தமிழக அரசின் பதவிகால முடிவடைகின்ற சூழ்நிலையில் நாங்கள் பதவி வகுத்த 5 ஆண்டு காலத்திற்குள் தமிழகத்தில் வறுமையை ஒழித்துவிட்டோம் எனக்கூறி, வரும் தேர்தலில் வாக்கு சேகரிக்கவே இந்த மோசடி கணக்கெடுப்பு நடந்துள்ளதா?

தமிழகத்தில் "தட்டினால் தங்கம், வெட்டினால் வெள்ளி, கொட்டினால் கோமேதகம்" என்ற கலைஞரின் வசனத்தை எல்லா தமிழர்களும் பேச ஆரம்பித்து விட்டனர்.

– பதவி



படிப்பகம்

www.padippakam.com

# சோகமான பிறந்தநாள்

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடிய அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாள் விழா இந்த ஆண்டு எப்போதும் இல்லாத வகையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அரசியல் கட்சிகளும் போட்டா போட்டி போட்டுக் கொண்டு ஆங்காங்கே உள்ள அண்ணலின் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து, பேரணி பொதுக் கூட்டம் நடத்தினர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முக்கிய எதிரியாக அண்ணல் தெளிவுபடுத்திய ஆர்.எஸ். எஸ்ஸின் பொய்முகமான பி.ஜே.பியும் இதற்கு விதி விலக்கல்ல. தமிழக அரசு ஒரு படி மேலே சென்று அன்றைய தினத்தை அரசு விடுமுறையாக அறிவித்தது. இந்த அதிசயத்தை கண்ட அனைவரும் இவையெல்லாம் வரப்போகும் சட்ட மன்ற தேர்தலை குறிவைத்தே நடக்கின்ற ஆர்பாட்டம் என புரிந்து கொள்ள தவறவில்லை.



பாலகிருஷ்ணன்

அதே சமயம் அண்ணல் அம்பேத்கர் எந்த மக்களின் உரிமைக்காக போராடினாரோ இன்று அந்த மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதும், அவர்கள் கொடுமைபடுத்தப் படுவதும், பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தபடுவதும், சாதி இந்துக்களால் கொலை செய்யப்படுவதும் அதிகரித்து கொண்டேதான் இருக்கிறது. இவையெல்லாம் அரசியல் கட்சிகளின் ஆசியோடுதான் நடத்தப்படுகின்றது என்பது வேடிக்கையான உண்மை.

அருணகிரி மங்களம் - திருவண்ணாமலை மாவட்டம் போளூர் தாலுக்காவிற்கு உட்பட்ட தாழ்த்தப் பட்ட மக்கள் அதிகமாக வாழும் கிராமம். ஏப்ரல் 14 நாடெங்கும் அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாள் விழா தாழ்த்தப்பட்ட மக்களிடையே கோலாகலமாக கொண்டாடபட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அருணகிரி மங்கலம் தாழ்த்தப்பட்ட மக்களிடையே மட்டும் அந்த நாள் துக்க நாளாக முடிந்து போனது.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பாலகிருஷ்ணன் மற்றும் கோவிந்தசாமி அன்றைய தினம் கூலி வேலைக்கு சென்றுவிட்டு சாதி இந்துக்கள் வசிக்கும் தெரு வழியாக வீடு திரும்பிக்கொண்டு இருந்தனர். இதில் கோவிந்தசாமி என்பவர் சிறுநீர் கழிக்க தெருவோரத்தில் அவசரமாக ஒதுங்கினார். இதை பார்த்த சின்னசாமி செட்டி மகன் முருகேசன், முருகேசனின் மனைவி, கட்ராம் செட்டியின் மருமகன் ஏழுமலை ஆகியோர் கொண்ட கும்பல், "பற நாய்ங்களே எங்க எடத்தில ஒண்ணுக்கு இருக்க எங்கிருந்துடா உங்களுக்கு திமிர் வந்தது" எனச் சொல்லியவாறு ஏழுமலை என்பவர் கையில் வைத்திருந்த சுத்தியால் கோவிந்தசாமியின் தாடையில் பலமாக தாக்கினார். கோவிந்தசாமியின் முகம் முழுவதும் சின்னாபின்னமானது. பற்கள் நொறுங்கி விழுந்தன.

இந்நேரத்தில் அவ்வழியே வந்த ராஜேந்திரன் மரண விளிம்பில் போராடிக் கொண்டிருக்கும் கோவிந்த சாமியை எப்படி யாவது பிழைத்து வைத்து விட வேண்டும் என்பதற்காக அவரை மருத்துவ மனைக்கு தூக்கிச்சென்று விட்டார். அவர் சென்ற பிறகு கோவிந்தசாமியுடன் வந்த பாலகிருஷ்ணன் எல்லா வற்றையும் பார்த்துவிட்டு ஏங்க இப்படி செஞ்சிங்க என்று சொல்லி வாயை மூடுவதற்குள் "ஏண்டா பற நாயே நீ என்னா அவனுக்கு வக்காலத்தா, உன்னையும் சும்மா விடக் கூடாதுடா" என கூறியவாறே ஏழுமலை என்பவருடன் சின்னசாமி செட்டியும் சேர்ந்து அதே சுத்தியால் தலை, முகம், உயிர்நாடி என



படிப்பகம்

www.padippakam.com



பாலகிருஷ்ணன் மனைவி


பல இடங்களில் கொடுரமாக தாக்கியுள்ளனர். பாலகிருஷ்ணன் இரத்த வெள்ளத்தில் அதே இடத்தில் மயங்கி விழுந்தார்.

தன்னை தாக்கியவர்களிடம் எவ்வளவோ கெஞ்சி மன்றாடியுள்ளார். ஆனால் பலனேதுமில்லை. இதனை கேள்விப்பட்ட பாலகிருஷ்ணன் குடும்பத்தினரும், தாழ்த்தப்பட்ட மக்களும் அலறி அடித்து ஓடி வந்தனர். இரத்த வெள்ளத்தில் மிதந்துக் கொண்டிருந்த பாலகிருஷ்ணனைப் பார்த்தவுடன் துடிதுடித்து போயினர். பாலகிருஷ்ணனின் உயிரும் நின்று போயிருந்தது. அந்நேரத்தில் கடலாடி இன்ஸ்பெக்டர் ராஜ்குமார் போளூர் டி.எஸ்.பி. அலுவலகத் திற்கு சென்று விட்டு காவல் நிலையத்திற்கு அவ் வழியே திரும்பிக் கொண்டிருந்தார். பாலகிருஷ்ண னின் நிலைமையைப் பார்த்தவுடன் பாலகிருஷ்ணனுக்கு "இன்னும் உயிர் உள்ளது போளூர் மருத்துவ மனைக்கு தூக்கிச் செல்லுங்கள்" என்றார். ஆனால் மருத்துவ மனையில் பரிசோதித்த பிறகு பாலகிருஷ்ணனுடைய உயிர் சில மணி நேரத் திற்கு முன்னரே பிரிந்துவிட்டது என மருத்துவர்கள் கூறினர்.

அக்கிராமத்தில் நேரில் ஆஜரான போது கொலைசெய்யப்பட்ட பாலகிருஷ்ணன் குடும்பத்தாரோடு அருணகிரி மங்கலம் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருமே சோகத்தில் மூழ்கியிருந்தனர்.

பாலகிருஷ்ணன் மனைவி "சார், என் வீட்டுக்காரரை அநியாயமா கொலை செஞ்சிட்டானுங்க இந்தப் படுபாவிங்க, என் பிள்ளைகளை எப்படி கரைசேக்க போறேன்னோ தெரியல. கல்யாண வயசில ஒரு பொண்ணும், 2 ஆம்பள பிள்ளைங்களும் இருக்காங்க, மனுசன் கூலி வேலை செஞ்சு சம்பாதித்து போட்டதை தான் இவ்வளவு நாளா வயித்த கழுவிக்குனு இருந்தோம். இனிமே எங்களுக்குனு யாரு இருக்காங்க என கதறி துடித்ததை கண்ட நமது கண்களும் குளங்களாயின.

கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஏழுமலை ஆகிய தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் நம்மிடம் சார் இந்த கொலை சம்பவத்தில் காவல் துறையும், அரசாங்கமும் ரொம்ப மெத்தனமா நடந்துக்குதுங்க, நாங்க பல போராட்டம் நடத்திய பிறகுதான் காவல் துறை கொலை குற்றவாளிகளை கைது செய்தது. ஆனால் எஸ்.சி. எஸ்.டி வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் பதிவு செய்யும்படி போளூர் டி.எஸ்.பி. மற்றும் கடலாடி இன்ஸ்பெக்டரிடமும் எடுத்துச்சென்னோம், போராடினோம். பலனேதுமில்லை. நாங்க கேட்கும்போதெல்லாம் வக்கில் மூலம் போயி முடிவு பண்ணித்தான் வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் பதிவு செய்யப்படும் எனச்சொல்லி அனுப்பி விடுகின்றனர். இதில் ஒரு கொடுமை என்னவெனில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் கொஞ்ச நாட்களிலேயே ஜாமினில் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். நிலைமை இப்படியிருந்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படி



பாலகிருஷ்ணன் கொலைசெய்யப்பட்ட இடம்

சார் இந்த ஊர்ல உயிர் வாழ்றது" என ஆவேசப்பட்டனர்.

அருணகிரிமங்களத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு என்பது கனவில் கூட நினைத்து பார்க்ககூடாத ஒன்று. அவர்கள் தங்கள் உடைமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பின்றி வாழ்ந்து வருகின்றனர். கொலை செய்யப்பட்ட பாலகிருஷ்ணனின் குடும்பம் இன்று நடுத் தெருவில் வாழ வழியின்றி நிற்கின்றது.

இதனை அரசாங்கம் கண்டு கொள்வதாக தெரியவில்லை. இந்நிலை இப்படியே நீடித்தால் ஆட்சியாளர் களும், அரசு அதிகாரிகளும் விரைவில் பெரும் போராட்டத்தை எதிர் கொண்டாக வேண்டும் என்பதை அருணகிரி மங்களம் தாழ்த்தப்பட்ட மக்களிடையே உணர முடிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

-தங்கள் தலைவன் தலைவிகளை வீரவழிபாடு செய்கிற வர்களாக - அடியாள் கும்பல்களாக - கூலி ப்படைகளாக ஆக்கி ஆளுகை புரியலாம் என்று கணக்குப் போட்டவர் களது முடிவுகள் தப்பாகி விட்டன. அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் போன்ற இயக்கங்கள் - அதன் இளைஞர்கள் - தலித் இயக்கப் புது அடையாளத்துடன் பீடுநடை போட்டு நீ செம்மாந்து நடக்கையில் நீங்கள் பலியாடுகள் அல்ல! சிங்கங்கள்! எனச் சொன்ன அண்ணலின் வார்த்தை பலிக்கிறது.

தம்பீ! அண்ணலின் எழுத்துக் களை வேதமாகப் படி! மனதில் விதை! அது விழுதாக ஊன்றி இயக்கச் செயலாகப் பரிணமிக் கட்டும்!.

அரசியலில் - தலித் அரசியல் தோழர்கள் யார்? எதிரிகள் யார்? துரோகிகள் யார்? என்ற கவனத்துடன் செயல்படு! தலித் இளைஞர்களிடம் கூட அவன் அந்த மதம்-இந்த மதம் என்ற தீண்டாமை நவீன வடிவம் எடுத்து வருகிறது.... அவன் இந்த உபசாதி என்கிற பாகுபாடு வளர்க்கப் படுகிறது - இதனால் தலித் இளைஞர்கள் பிரித்தாளப்படுகிற நிலை தொடர்கிறது!

இவையெல்லாம் உட்பகை மூலம் நம் வலிமையைச் சிதறடிக்கும் சதிகள்! விழித்திரு! பசித்திரு! சேர்ந்திரு! என்பது புது முழக்கம் ஒரு வீறுமிக்க தலித் இளைஞன் - இளம்பெண் தன் சக தலித் மக்கள் மீது நிபந்தனையற்ற அன்பு செலுத்துவார்கள்! சக மக்கள் பாதிக்கப்பட்டால் போர்க்குணமும் புரட்சி மனமும் கொண்டு அறச்சினத்துடன் போராடுவார்கள்! தலித் இளைஞர்களுக் குரிய சரியான மனநிலை அதுவே!

அண்ணன் **இளையநந்தன்**, திருச்சி.

# அசைக்க முடியாத இடத்தில்
# -- ஆர்.எஸ்.எஸ் --

மத்திய அரசின் ஊட்டத்துக்கும், கொஞ்சலுக்கும், சீராட்டலுக்கும் உரித்தான நிறுவனம் ஐ.ஐ.டி. இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி என்னும் பெயரில் இந்தியாவில் ஆறு இடங்களில் இவ் உயர் தொழிற்கல்விக்கூடம் உள்ளது. இந்த ஆறு நிறுவனங்களிலும் கடந்த 40 ஆண்டுகளாகப் படித்துக் கொழுத்தது மேட்டுக்குடி மக்களே. இந்திய மக்கள் தொகையில் 5 விழுக்காடு கூட இல்லாத ஆர்.எஸ்.எஸ். ஆதரவு பார்ப்பனர்களே இந்நிறுவனங்களை முழுவதுமாக ஆக்கிரமித்துள்ளனர்.

திருமிகு. வி.பி.சிங். மண்டல் கமிசனை நடைமுறைப்படுத்தியபோது, தமிழக ஒருமித்த தனது ஆதரவை வழங்கியபோது - பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிமை வழங்கிய அச்செயலை கண்டித்து சண்டித்தனம் பண்ணிய ஒரே இடம் ஆர்.எஸ்.எஸ். முகாமாக விளங்கும் சென்னை ஐ.ஐ.டி. என்பதை நினைவில் கொள்க.

அடிமட்டத்து மக்களின் வரிப்பணத்தில் தின்று கொழுக்கும் இவ்வுயர் தொழில்நுட்பக்காரர்கள் படித்து முடித்ததும் அமெரிக்காவுக்கும், அய்ரோப்பாவுக்கும் சென்றுவிடுவர். இந்திய மக்களின் வியர்வை பணத்தில் படித்த இவர்களால் இந்தியருக்கு எந்தப் பலனும் இல்லை.

இங்கு இட ஒதுக்கீட்டுக் கொள்கை எல்லாம் மருந்துக்கும் கிடையாது. சென்னையிலுள்ள ஐ.ஐ.டி -யில் 5 விழுக்காட்டுக்கும் குறைவான பார்ப்பனர்கள் 60 விழுக்காட்டுக்கும் மேலான மத்திய அரசின் பெரும் பதவிகளில் அமர்ந்திருப்பது உண்மை! இங்கு மொத்தப் பேராசிரியர்கள் 372 பேர். இதில் 2 பேர் மட்டும் தாழ்த்தப்பட்ட இனத்தவர். 25 பேர் பிற்படுத்தப்பட்ட இனத்தவர். 85% தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட குழுக்களிலிருந்து வெறும் 27 பேரே இங்கு பேராசிரியர்கள். 15 விழுக்காடு உள்ள மேட்டுக்குடியிலிருந்து 345 பேராசிரியர்கள்.

ஆர்.எஸ்.எ. இந்த மனுநீதி போக்கை அடிபிறழாமல் கடைப்பிடிக்கும் ஐ.ஐ.டி. பூணுலாரைத் தட்டிக் கேட்க வேண்டாமா? உச்சநீதி மன்றத்திலும், உயர்நீதி மன்றத்திலும் இதற்கான பல வழக்குகள் பதிவாகியுள்ளன. வெற்றிடமாக உள்ள நூறு பேராசிரியர் பணிக்கும் பார்ப்பன மேட்டுக்குடிகளை நியமிக்கத் துடிக்கிறது ஐ.ஐ.டி. நிறுவனம்.

நன்றி : நம்வாழ்வு 9.04.2000.



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் போராட்டம்





திருவண்ணாமலை மாவட்டம் பத்தியாவரம் தலித் மக்கள் தங்கள் உரிமைகளை கோரியும் புனித சூசையப்பர் பள்ளி நிர்வாகத்தை வெளியேற வற்புறுத்தி நடத்திய சாலைமறியல்.

## பிணம் எரிக்கும் போராட்டம்!

விழுப்புரம் மாவட்டம் திருநாவலூர் ஒன்றியம், கல்பாதூர் கிராமம். இங்கு 1000-க்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இந்தக் கிராமத்தில் பல ஆண்டுகளாக சுடுகாடு இல்லை. தலித் மக்கள் சார்பில் பலமுனை போராட்டங்கள் நடத்திய பிறகு மயானம் கிடைத்தது. கிடைத்தும் பயன் இல்லை. பிணத்தைத் தூக்கிச் செல்ல பாதை இல்லை என போராடியபிறகு பாதை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பாதைதான் கிடைக்கவில்லை. பாதைக்காக அரசு நிலத்தை கையகப்படுத்தியுள்ளது. அந்தப் பாதையில் நிலம் வைத்திருக்கும் சாதி இந்துக்கள் பிணத்தை தூக்கிச் செல்ல அனுமதிக்கவில்லை. பாதையை கண்ணன், ஆறுமுகம், கண்ணன் ஆகியோர் ஆக்கிரமித்து உள்ளனர்.

இதுபற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை. அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை பல முறை நேரில் சந்தித்ததில் பலன் இல்லை. கடந்த மாதம் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் மாவட்ட செயலர் வி. தலித்தாஸ் திருநாவலூர் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலரை சந்தித்து கோரிக்கை மனுகொடுத்தனர். ஒரு மாதத்தில் மயான பாதை சரிசெய்து தருகிறேன் என்று உறுதியளித்தார். ஆனால் பயன் இல்லை. மீண்டும் 22-05-2000 தேதி மாவட்ட செயலாளர் தலித்தாஸ் மாவட்ட ஆட்சி தலைவரை சந்தித்து பேசினார்.

இயக்கத்தின் சார்பில் ஜூலை மாதம் முதல் வாரத்தில் திருநாவலூர் ஒன்றிய அலுவலகம் முன்பு பிணம் எரிக்கும் போராட்டம் நடத்தவேண்டும் என விழுப்புரம் மாவட்ட செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அரசு தலையிட்டு இப்பிரச்சனையை தீர்க்கவில்லை எனில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் தாழ்த்தப்பட்ட மக்களோடு போராட்டத்தில் களம் இறங்க தயாராகி வருகின்றனர்.

- நமது நிருபர்



படிப்பகம்

www.padippakam.com

# தலித் கல்வி!



தலித் மாணவ விதைகளே!
கல்விக்கூடம் -உன்னை
கலைகளில் வளர்க்கும் கலைக்கூடம்
படைத்து, பயிற்றுவித்து,
பண்புதந்து, பாதுகாத்து,
பராமரிப்பது பள்ளிக்கூடமே!
தலித் சமுகத்தின் நம்பிக்கையே!
உன்.......
காலடிச் சுவடுகளை
கல்விக்கூடம் நோக்கி எட்டிப்போடு!
கசக்கும் கவலைகள்
உனக்குக் கவியாகும்
சுமக்கும் சுமைகள்
உனக்கு சுமாகும்!!
தலித் செல்வங்களே!
கல்விக் கூடங்களின்
கதவுகள் திறந்துள்ளன!
நுழைய மறந்தால் நீ
சந்திப்பது குழந்தை தொழிலாளர்களின்
கூண்டுச் சிறைதான்!!
ஆகவே......
கல்வி கற்க
காலத்தை ஒதுக்கு -அது
மகிழ்ச்சியின் வாய்க்காலாக அமையும் !
கற்பி என்றார் அம்பேத்கர் இதனால்தான் !!
வாழ்த்துகிறேன் !!

**வளன் இல்லத்தார்**
சீனிவாசநகர்.




விழுப்புரம், கடலூர் மாவட்ட நிர்வாகிகள்.



படிப்பகம்

www.padippakam.com



புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் 110-வது பிறந்த நாள் விழா [ஏப்ரல் 14, 2000] அன்று அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகிகள், மாவட்டத் தலைவர் அரையாளம் தாஸ் தலைமையில் மாவட்டம் முழுவதும் அண்ணலின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய காட்சி. உடன் மாவட்டச் செயலர் ஆர். மூவேந்தன் மற்றும் மாவட்ட இணைச் செயலர் சுரேஷ். இதில் மாநில உயர்மட்ட ஆலோசகர் எம். திருப்பதியான் கலந்து கொண்டார்.



காஞ்சிபுரம் மாவட்டம், அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க உப்பளத் தொழிலாளர்களுக்கு கருத்துக்களை வழங்குகிறார் நிறுவனர் அய்யா எல். யேசுமரியான்



அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் கடலூர் மாவட்ட புதிய நிர்வாகிகள்

படிப்பகம்

நூல் அஞ்சல்

பெறுநர்

Published by G. GOPINATHAN, 67, Can
Street, Chennai - 600 021. Printed
M. NAVANEETHAN at NAVAJOTHI ACHAGA